# ஜனாதிபதி அரசியலமைப்பை வேண்டுமென்றே புறக்கணிப்பது குறித்த CPA அறிக்கை.

29 ஜூலை 2024 (கொழும்பு): பொலிஸ் மா அதிபரின் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை செயற்படுத்துவதிலிருந்து திரு. தேசபந்து தென்னக்கோனை தடை செய்து கடந்த வாரம் உயர் நீதிமன்றம் பிறப்பித்த தடை உத்தரவுக்கு பதிலளிக்கும் வகையிலான ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளை CPA நிறுவனம் ஆழ்ந்த கரிசனைகளுடன் குறிப்பிடுகிறது. இந்த இடைக்கால தடை உத்தரவுக்கு எதிராக ஜூலை 27ம் திகதி நாடாளுமன்றத்தில் பிரதமரினால் வெளிப்படையாக வெளியிடப்பட்ட உத்தியோகபூர்வ அறிக்கை உட்பட அரசாங்கத்தின் அறிக்கைகள் அதனை நிராகரிப்பதோடு, இலங்கையில் அரசியலமைப்பு ஒரு நெருக்கடியை நோக்கி செல்கிறதா என்ற எச்சரிக்கையை எழுப்புகிறது. அந்த வாய்ப்பை எழுப்பும் எந்தவொரு அல்லது அனைத்து நடவடிக்கைகளிலிருந்தும் விலகுமாறு CPA நிறுவனம் ஜனாதிபதியை வலியுறுத்துகிது. 21ம் திகதி செப்டம்பர் 2024 அன்று நடைபெறவிருக்கின்ற ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதியை நிர்ணயித்து தேர்தல்கள் ஆணைக்குழு வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டதன் பின்னணியில் அரசியலமைப்புக்கு மதிப்பளித்து தேர்தலின் நேர்மையை மதிக்கவேண்டியது அரசாங்கத்தினதும் மற்றும் அனைத்து பங்குதாரர்களினதும் கடமையாகும்.

தேர்தலையும் மற்றும் சட்டத்தின் ஆட்சியையும் சீர்குலைக்கும் எந்த முயற்சியும் நல்லாட்சி மற்றும் ஜனநாயகம் என்பவற்றில் குறிப்பிடத்தக்க தாக்கங்களை ஏற்படுத்துவதோடு பொருளாதார மீட்சி மற்றம் ஸ்திரத்தன்மையை நோக்கிய இலங்கையின் பாதையில் பின்னடைவை ஏற்படுத்தும்.

அண்மைய நிகழ்வுகள் சிலவற்றையும், அவற்றின் தாக்கங்களையும் பின்வருபவை சுருக்கமாக முன்வைக்கின்றன.

<u>பொலிஸ் மா அதிபர் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவு</u>

இந்த வாரம் பிறப்பிக்கப்பட்ட உயர் நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவானது தென்னக்கோன் பொலிஸ் மா அதிபராக நியமனம் பெற்றதை சாவாலுக்கு உட்படுத்தி தாக்கல் செய்யப்பட்ட பல வழக்குகளுக்கு பதிலளிக்கும் வகையில் அமைந்திருந்தது. இவ்வழக்குகள் தொடர்பில் ஒரு மனுவை CPA நிறைவேற்றுப் பணிப்பாளர் தாக்கல் செய்திருந்தார். நீண்ட சமர்ப்பிப்புக்களைக் கேட்ட பின்பு, நீதிமன்றம், மனுதாரர்களின் வழக்கு அடுத்த கட்டத்திற்கு செல்லலாம் என்று கண்டறிந்தது. வழக்கில் வலுவான சமர்ப்பிப்பு காரணமாக, நீதிமன்றம், இடைக்கால தடையையும் விதித்தது.

தெளிவான மற்றும் குழப்பமற்ற அரசியலமைப்பு விதிகளை நிலைநிறுத்தும் இந்த இடைக்கால உத்தரவை CPA வரவேற்கிறது. CPA வின் நிலைப்பாடு என்னவென்றால், நீதிமன்றத்தில் பிரதிவாதிகளால் சமர்ப்பிக்கப்பட்ட அரசியலமைப்பு பேரவை கூட்ட குறிப்புகள் உட்பட, ஆவணங்களின் அடிப்படையில், ஜனாதிபதியால் திரு. தென்னக்கோனை பொலிஸ் மா அதிபராக 26ம் திகதி பெப்ரவரி 2024 அன்று நியமித்திருக்க முடியாது. ஏனெனில், அரசியலமைப்பு பேரவையில் குறைந்த பட்சம் ஐந்து உறுப்பினர்களின் ஆதரவு பூர்த்தி செய்யப்படவில்லை.

அரசியலமைப்பை நிலைநிறுத்த வேண்டிய கடமை ஜனாதிபதிக்கு உள்ளது என்று CPA குறிப்பிடுகிறது. அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பொருத்தமான நடைமுறையைப் பின்பற்றி பதில் நியமனம் செய்வதிலிருந்து ஜனாதிபதியைத் தடுக்கும் எந்த விடயமும் இந்த

Centre for Policy Alternatives (Guarantee) Limited | 6/5, Layards Road, Colombo 5, Sri Lanka
Tel: ++94112081384, +94112081385, +94112081386 | Fax: +9411 2081388 | Email: info@cpalanka.org | Web: www.cpalanka.org

உத்தரவில் இல்லை. ஜனாதிபதி பதில் நியமனம் செய்யாவிட்டால் அது அவர் எடுக்கும் ஒரு தெரிவாகும். அந்தத் தேர்வின் விளைவுகளுக்கு அவரே முழுப்பொறுப்பேற்க வேண்டும். அரசியலமைப்பு என்ன செய்ய வேண்டும் என்று கோருகிறதோ அதை வேண்டுமென்றே செய்ய மறுப்பது உட்பட அரசியலமைப்பை மீறுதல் என்பன ஜனாதிபதி மீது அரசியற் குற்றச்சாட்டு சுமத்துவதற்கான ஒரு அடிப்படையாகும். அண்மையில் நடந்த சில சம்பவங்களைப் போல, ஜனாதிபதி பதவியை வகிக்கும் ஒருவர் அத்தகையவற்றுக்காக அவரது பதவிக்காலம் முடிவடைந்த பின்னரும் கூட தனது தனிப்பட்ட முறையில் பொறுப்பேற்க வேண்டும். அத்தகைய சூழலில் பதவி வகிக்கும் ஒரு தனிநபரால் அரசியலமைப்பை சீர்குலைக்கும் அல்லது குறைமதிப்பிற்கு உட்படுத்தும் எந்தவொரு நடவடிக்கையும் கண்காணிக்கப்பட்டு தேவையான சட்டநடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

<u>உயர் நீதிமன்ற இடைக்கால உத்தரவு குறித்து தவறான தகவல்</u>

உயர் நீதிமன்ற உத்தரவின் செல்லுபடியான தன்மை மற்றும் தாக்கம் குறித்து ஜுலை 27 அன்று பிரதமர் சபையில் அளித்த அறிக்கை உட்பட குறிப்பிடத்தக்க தவறான தகவல்கள் உள்ளன, என்று CPA குறிப்பிடுகிறது. உயர் நீதிமன்ற உத்தரவு நாடாளுமன்றத்திற்கு எதிரானதோ அல்லது அரசியலமைப்புப் பேரவைக்கு எதிரானதோ அல்ல. மேலும் அரசியலமைப்புப் பேரவை நாடாளுமன்றத்தின் ஒரு குழு அல்ல. எனவே அரசியலமைப்புப் பேரவை பிரத்தியேக அறிதலுக்கான நாடாளுமன்ற சிறப்புரிமையினால் பாதுகாக்கப்படவில்லை. பொலிஸ் மா அதிபர் அலுவலகத்தில் திரு. தென்னக்கோன் தனிப்பட்ட முறையில் செயல்படுவதை உயர்நீதிமன்றம் கட்டுப்படுத்துகிறது.

இந்த உத்தரவு நாடாளுமன்றத்தின் செயல்பாடுகளுக்கு எதிரான உத்தரவு என்ற கருத்து தகுதியற்றது. மேலும் அரசியலமைப்பு மற்றும் சட்டம் என்பவற்றை பொருத்தமட்டில் இக்கருத்து அடிப்படையற்றது. இவ் விடயங்களை அரசாங்கம் தனக்குத்தானே தவறாக அறிவித்துக்கொண்டு உயர் நீதிமன்றம் தொடர்பில் தனது பொறுப்பற்ற பதிலளிப்பில் சட்டத்தின் ஆட்சி, அதிகாரப்பிரிப்பு மற்றும் நீதித்துறையின் சுதந்திரம் என்பவற்றின் மையமான பல அரசியலமைப்பு மரபுகளை மீறி செயல்பட்டுள்ளது.

இந்த மரபுகளாவது: அரசாங்கம் ஒரு நீதிமன்றத்தின் உத்தரவுக்கு கீழ்படிதல், விசேடமாக அது நீதித்துறை தீர்ப்பின் நியாயத்துடன் உடன்படாத போதும், நாடாளுமன்றத்திலோ அல்லது வேறு எங்கும் நீதித்துறைக்கு எதிராக தாக்குதல் நடாத்திருத்தல் மற்றும் sub judice கோட்பாட்டைக் கடைப்பிடித்தல் என்பனவாகும்.

பொலிஸ் மா அதிபரின் அலுவலக செயற்பாடுகளை செயற்படுத்துவதற்கு ஜனாதிபதியால் பதில் நியமனத்தை வழங்கமுடியாது என்பதைக் குறிக்கும் தவறான தகவல் பிரச்சாரத்தையும் CPA குறிப்பிடுகிறது. இந்த கூற்று வெளிப்படையான தவறாகும். பதில் நியமனங்கள் தொடர்பில் அரசியலமைப்பு குறிப்பிட்ட ஏற்பாடுகளைச் செய்துள்ளது ( உறுப்புரை 4/c(2)). அதற்கான ஒரே தேவை, அத்தகைய நியமனம் இரண்டு வாரங்களுக்கு மேலான காலத்திற்கு எனின், ஜனாதிபதி அரசியலமைப்புப் பேரவையின் ஒப்புதலைப்பெற வேண்டும். மேலும் சமீபத்திய எடுத்துக்காட்டுகள் இந்தத் தவறான கூற்றுக்களை அகற்றுகின்றன. முதலாவதாக 2019 ஆண்டு உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்குப் பின்னர் அப்போதைய ஜனாதிபதி திரு. C.D விக்கிரமரட்னவை பதில் பொலிஸ் மா அதிபராக நியமித்தார். திரு. பூஜித் ஜெயசுந்தர (அப்போதைய பொலிஸ் மா அதிபர்), அவரது நடத்தை தொடர்பில் விசாரணைகள் முடியும்வரை இடைநிறுத்தப்பட்டார். மிக அண்மையில் பொலிஸ் மா அதிபர் பதவிக்கு பதில் நியமனம் மேற்கொள்ளப்பட்டு திரு. தென்னக்கோன் 2023 நவம்பரில் பதில் பொலிஸ் அதிபராக முதலில் நியமிக்கப்பட்டார்.

எனவே பொலிஸ் மா அதிபர் பதவிக்கு பதில் நியமனம் வழங்குவதற்கு ஜனாதிபதிக்கு எவ்வித தடையும் இல்லை. உண்மையிலேயே அரசியலமைப்பின் படி பொருத்தமான பதில் நியமனத்தை மேற்கொள்வதற்கு ஜனாதிபதி நீதிமன்றத்தின் உத்தரவையும் தனது சொந்த பொறுப்புக்களையும் மதிக்க வேண்டும்.

துரதிஷ்டவசமாக ஜனாதிபதி நீதிமன்றத்தின் உத்தரவு தொடர்பில் விரக்தியை ஏற்படுத்தும் வகையிலும், அரசியலமைப்பை சீர்குலைக்கும் வகையிலும் செயல்படுவதாகத் தெரிகிறது.

<u>உயர் நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவும், ஜனாதிபதித் தேர்தலும்</u>

ஜனாதிபதி தேர்தலை நடாத்துவதில் இடைக்கால உத்தரவு ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும் என்ற மறைமுகமாக உணர்த்தும் முயற்சிகளை CPA குறிப்பிடுகிறது. இந்த உத்தரவு தேர்தலை நடாத்துவதில் எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாது. ஜனாதிபதி இவ்விதமான நியமனத்தை செய்யாவிட்டாலும், தேர்தல் கடமைகள் தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு தேவையான உத்தரவுகளை பொலிஸ் உயர்பீடத்திற்கு வழங்குவதற்கு அரசியலமைப்பு விதிகளின்படி தேர்தல் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.